வாரம் இருமுறை

தமிழக
# அரசியல்

வியாழன் மற்றும் ஞாயிறு

புதியதோர் உலகம் செய்வோம்

vol - 3 Iss. - 64 விலை ₹ 9 www.tamilagaarasiyal.com 24.08.2011

ஆரா



மரம் நடும் யோகநாதன்...

# 'ரியல் ஹீரோ'வை கண்டுகொள்ளுமா அரசு?

கோத்தகிரி மலைப் பகுதியிலிருந்து உயர் ரக மரங்களை வெட்டி வீழ்த்தி சுமந்துகொண்டு, கீழே மேட்டுப்பாளையத்தை நோக்கி இறங்கிக் கொண்டிருக்கிறது அந்த லாரி. அப்போது மாலை மங்கும் நேரம். மணி ஏழு இருக்கும்.

திடீரென அந்த மலைச் சாலையில் இருபது வயது இளைஞன் ஒருவன் இறங்கும் லாரியை மறித்து நடு ரோட்டில் நிற்கிறான். மோதுவது போல் வந்த லாரி அவனை உரசிக் கொண்டு நிற்க.. 'என்னடா?' என அதட்டுகிறார்கள் லாரியில் இருந்தவர்கள்.

'நீங்க வெட்டினது மரம் இல்லடா.. உன் பேரன் பேத்திகளோட கை கால்கள். ஒழுங்கா வனத் துறைக்கிட்ட கொடுத்துட்டு சரண்டராகிடுங்க..'

இருபது வயது பையனின் வாயிலிருந்து இப்படிப்பட்ட வார்த்தைகள் வரும் என்று அந்தக் கடத்தல்காரர்கள் எதிர்பார்க்கவில்லை.

கீழே இறங்கி, ஒரு மரக் கட்டையை உருவி அவனை சரமாரியாக அடித்தார்கள். அவன் சத்தம் போட, கூட்டம் கூட... வனத்துறைக்கும் போலீஸுக்கும் தகவல் போய் அவர்களும் வந்துவிட கடத்தப்பட்ட மரங்கள் மீட்கப்பட்டன.

அந்த இருபது வயது இளைஞன் யோகநாதன்தான்... கடந்த ஆகஸ்ட் 17-ம் தேதி மும்பையில் சி.என்.என். - ஐ.பி.என். தொலைக்காட்சி சார்பாக வழங்கப்படும் 'ரியல் ஹீரோ' விருதை வாங்கிக் கொண்டு, நாற்பத்தைந்து வயது நபராக நின்றுகொண்டிருந்தார்.

இதுவரை ஒருலட்சத்து இருபத்தைந்தாயிரம் மரக் கன்றுகளை நட்டு மரமாக்கியது, சுமார் மூவாயிரம் சுற்றுச் சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தியது, பல முறை மரக் கடத்தலை தடுத்தது. இப்படிப்பட்ட சிறப்புகளுக்காகத்தான் சி.என்.என். - ஐ.பி.என். தொலைக்காட்சியின் ரியல் ஹீரோவாகியிருக்கிறார் யோகநாதன். அந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட கோடீஸ்வர தொழிலதிபர் அம்பானி இவரைக் கட்டியணைத்தபடி 'ஐ ஆம் ப்ரவுடு ஆஃப் யூ' என்று நெகிழ்ந்திருக்கிறார்.

கோவை மாநகரத்தில் டவுன் பஸ்ஸில் கண்டக்டராக இருக்கும் யோகநாதன் இவ்வளவு தூரம் பயணித்தது எப்படி?



கலாமுடன் யோகநாதன்...

அவரிடமே கேட்டோம். ரியல் ஹீரோ விருது வாங்கிய உற்சாகத்தில் நம்மிடம் பேச ஆரம்பித்தார்.

"நமக்கு சொந்த ஊர் மாயவரம்ங்க. சின்ன வயசுலயே அப்பா இறந்துட்டாரு. அக்காவை ஊட்டியில கட்டிக் கொடுத்திருந்ததால பஞ்சம் பிழைக்க நானும் அம்மாவும் அக்கா ஊருக்கே வந்துட்டோம். ஊட்டியில கொஞ்ச நாள் வேலையில்லாம திரிஞ்சுக்கிட்டிருந்தேன். அப்பவெல்லாம் இயற்கைய நேசிக்கிறதுதான் எனக்கு வேலையாகிடுச்சு.

அப்போ மலைக் காடுகள்லேர்ந்து நிறைய தடவ மரங்களை வெட்டிக் கடத்தறதை என் கண்ணால பாத்திருக்கேன். ஒரு கட்டத்துக்கு மேல பொறுத்துக்க முடியாமதான் லாரி முன்னாடி விழுந்தெல்லாம் தடுத்து நிறுத்த ஆரம்பிச்சேன். இதுக்கு இடையில ஒரு பொழப்பு வேணுமேன்னு கண்டக்டரா தனியார் பஸ்கள்ல ஓடி, 2001-ல் கோவை அரசுப் போக்குவரத்துக் கழகத்துல கண்டக்டரா ஜாயின் பண்ணினேன்" என்று தான் சுற்றுச்சூழல் போராளியான விதத்தை விவரித்தார் யோகநாதன்.

> எல்லா மாதங்களும் எனக்கு 'லாஸ் ஆப் பே' தான். ஒரு மாத சம்பளத்தைக் கூட நான் முழுதாக வாங்கியது கிடையாது

ஒருமுறை பஸ்ஸில் சென்று கொண்டிருக்கும் போது ரோட்டில் பல ஆண்டுகள் ஆன ஒரு புளியமரத்தை வெட்டி வீழ்த்திக் கொண்டிருந்தார்கள். சடக்கென விசில் ஊதி வண்டியை நிறுத்தினார் யோகநாதன். கீழே இறங்கிப்போய் மரம் வெட்டுபவர்களிடம், 'நிறுத்துங்க. உங்க மரமா இருந்தாலும் அரசாங்கத்தைக் கேக்காம வெட்டக் கூடாது' என்று சொல்லி உடனே தனது நண்பரான வக்கில் கார்க்கியை அழைத்திருக்கிறார். அவரும் ஸ்பாட்டுக்கு வந்துவிட பெரும் வாதத்துக்குப் பிறகு அந்தப் புளியமரத்தை வெட்டாமல் தடுத்துவிட்டார்கள். இதுபோல் இவர் காத்த மரங்கள் ஏராளம். இதனால்தான் 2008-ம் ஆண்டு 'சூழல் போராளி' என்ற உயரிய விருதை யோகநாதனுக்கு வழங்கினார் இந்தியக் குடியரசுத் தலைவர்.



விருது விழாவில் அம்பானியுடன்...

அந்த ஞாபகங்களையும் நம் கண்முன் கொண்டுவந்தார் யோகநாதன்.

"பல்லாயிரம் மரக் கன்றுகள் நட்டுவருவதாலும், பல பள்ளிகளுக்குச் சென்று சுற்றுச் சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்துவதாலும் எனக்கு 'சூழல் போராளி' விருதை இந்திய குடியரசுத் தலைவர் கொடுத்தார். அதன் பிறகு, சமீபத்தில் முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் கோவை வந்திருந்தபோது அவரை சந்தித்தேன். எனது பணிகள் பற்றி வியப்பு தெரிவித்து விட்டு பாராட்டினார். இப்போது சி.என்.என். - ஐ.பி.என். விருது கொடுத்திருக்கிறார்கள்.

இப்படி எத்தனையோ விருதுகள் வாங்கினாலும் இந்தச் சூழலியல் போராளி, அரசு போக்குவரத்துக் கழகத்தோடும் போராட வேண்டியிருக்கிறது சார்" என்று அலுத்துக் கொண்ட யோகநாதனிடம் காரணம் கேட்டோம்.

"நான் 2008-ல் குடியரசுத் தலைவர் விருது வாங்கியபோது எனது அப்போதைய எம்.டி., பூபதி, நோட்டீஸ் போர்டில் என்னைப் பற்றி குறிப்பிட்டு பாராட்டினார். மற்றபடி என்னையே அடமானம் வைத்து நான் செய்யும் இந்த சுற்றுச் சூழல் பணிகளுக்காக அரசு போக்குவரத்துக் கழகம் கொடுத்த பரிசு எல்லா மாதங்களும் 'லாஸ் ஆப் பே' தான். ஒரு மாத சம்பளத்தைக் கூட நான் முழுதாக வாங்கியது கிடையாது.

இத்தனைக்கும் நான் லீவு போடுவது எனது சொந்தக் காரணத்துக்கும் கிடையாது. தமிழகம் முழுவதும் பல பள்ளிகளில் என்னை சுற்றுச் சூழல் பற்றி வகுப்பு எடுக்க கூப்பிடுகிறார்கள். அதற்கு லீவு போட்டுவிட்டுத்தான் போகிறேன். ஆளுங்கட்சி யூனியனின் இணைச் செயலாளர்களுக்கெல்லாம் பல நாட்களுக்கு சும்மாவே ஆன் டியூட்டி கொடுக்கிறார்கள்.

அதுபோல என்னைப் போன்றவர்களுக்கும் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு 'ஆன் டியூட்டி' கொடுத்தால் எனது இந்த சேவைகளை செய்ய இன்னும் வசதியாக இருக்கும். 'தமிழக அரசியல்' மூலம் நமது முதல்வர் அம்மாவுக்கும், போக்குவரத்துத் துறை அமைச்சர் செந்தில் பாலாஜி அவர்களுக்கும் கோரிக்கை வைக்கிறேன். நடக்குமா சார்?" என்று நம்மை கேட்டார் யோகநாதன்.

தமிழகத்தின் புகழை இந்திய அளவில் எடுத்துச் சென்று இயற்கையைக் காப்பாற்றிவரும் இந்த 'ரியல் ஹீரோ'வுக்கு உதவுமா தமிழக அரசின் போக்குவரத்துத் துறை? ■